விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 23
ஒலி 100 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 15 செவ்வாய்க்கிழமை (29.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

யாழ்.பண்பாட்டு மையம்

## இணையவழி மூலமாக மகிந்த, ஜெய்சங்கரால் திறப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பண்பாட்டு மையம் நேற்று எளிமையான முறையில் திறந்து வைக்கப்பட் 15

## புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஒத்துழைக்கும்

### ஜனாதிபதியிடம் அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு)

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களுக்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம் (USAID) மூலம் கடன் வசதிகளை வழங்குவதற்கு 15



# 13ஐ முழுமையாக அமுல்படுத்த ராஜபக்ஷ அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்



### இந்திய வெளிவிவகார அமைச்சர் கூட்டமைப்பிடம் உறுதி

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்போம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உறுதியளித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலமைப்புக்காக காத்திருந்து ஏனையவற்றை விட்டுவிடாதீர்கள்

### கூட்டமைப்புக்கு ஜெய்சங்கர் ஆலோசனை

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு விவகாரத்தில் சிக்கிவிடாதீர்கள், அதற்காக காத்திருந்து ஏனைய விடயங்களில் கோட்டைவிட்டு விடாதீர்கள். அரசாங்கத்துடனான பேச்சில் ஏனைய விடயங்களில் கவனம் செலுத்தி, அவற்றை விரைவாக பெற முயற்சியுங்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் ஆலோசனை வழங்கியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிற்குமிடையிலான சந்திப்பு நேற்று மாலை 4.30 மணியளவில் கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றது.

சந்திப்பின் தொடக்கத்தில், அண்மையில் 15

## இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து உதவி செய்யும்

### நிதியமைச்சரிடம் ஜெய்சங்கர்



15

## இந்திய வெளிவிவகார அமைச்சருடன் ஜனாதிபதி கோட்டாபய சந்திப்பு

### இந்தியாவின் கடனுதவிக்கு நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார 15



மின்கட்டணம், எரிவாயு, எரிபொருள்

## விலையேற்றம் இல்லை

### அமைச்சரவையில் பசில்

(கொழும்பு)

மின் கட்டணங்கள், எரிவாயு விலைகள் மற்றும் எரிபொருள் விலைகள் தற்போதைக்கு அதிகரிக்கப்பட மாட்டாது என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்த ஆலோசனையை அமைச்சரவைக்கு வழங் கியுள் ளார் என்று அரசியல் அவ 15

வருமானம் குறைந்தோருக்கு

## ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு விசேட கொடுப்பனவாக 5,000 ரூபாயை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பகுதித் தலைவர்,
வரலாறு பாடஆசிரியர்
திரு. **வேலாயுதர் சிவானந்தநாதன்**
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் வேலாயுதர் இராசம்மா**



மண் மகிழ : 31.10.1931 கண் நெகிழ : 27.03.2022

அவர்களின் மறைவிற்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் நலன்புரிச் சங்கம்**
**யா/ இணுவில் மத்திய கல்லூரி**

(10823)


# மேலும் ஒரு பில்லியன் டொலர் கடனை இந்தியாவிடம் கோரியது இலங்கை

(கொழும்பு)

மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இலங்கை, அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இந்தியாவிடம் இருந்து மேலும் 1 பில்லியன் டொலர் கூடுதல் கடன் கோரியுள்ளதாக ரொய்ட்டர்ஸ் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் உள்ளிட்ட தரப்புக்களுடன் நேற்று பேச்சுவார்த்தைகளை நடத்திய நிலையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

2020 ஜனவரியில் இருந்து அன்னியச் செலாவணி கையிருப்பில் 70% வீழ்ச்சியடைந்த நிலையில் உணவு மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய டொலர் இன்றி இலங்கை போராடி வருகிறது.

இந்நிலையில் அரிசி, கோதுமை மா, பருப்பு வகைகள், சீனி மற்றும் மருந்துகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக மேலும் 1 பில்லியன் டொலர் கடனை இலங்கை கோரியுள்ளதாக புதுடெல்லி வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

இது ஏற்கனவே இந்தியாவால் உறுதியளிக்கப்பட்ட 1 பில்லியன் டொலர் கடனுக்கு மேலதிகமாக இருக்கும் என மற்றொரு வட்டாரம் தெரிவித்ததாகவும் ரொய்ட்டர்ஸ் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்த விவாதங்கள் ரகசியமானவை என்பதால் தமது ஆதாரங்களை வெளியிட வேண்டாமென தகவல் தந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

(ம)


**வேலையாட்கள் தேவை**

தையல் வேலை தெரிந்த
ஆண்கள் தேவை.
தங்குமிட வசதி உண்டு.

**077 458 2344**
கிளிநொச்சி

(C-4079)


# பெயர் மாற்றம்

சுழிபுரம் மேற்கு சுழிபுரத்தில் வசிக்கும் செ.சுடர்முரசு ஆகிய நான் எனது பெயரை 29.03.2022 இன்று முதல் **செ.உதயச்சந்திரன்** என பெயர் மாற்றம் செய்கிறேன்.

எனவே இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் **செ.உதயச்சந்திரன்** எனும் பெயரையே பயன்படுத்துவேன் என்பதை இலங்கை வாழ் சனநாயகக் குடியரசின் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

இப்படிக்கு
**செ.உதயச்சந்திரன்**

(10815)


# கண்ணீர் அஞ்சலி

அமரர்
**சுப்பையா பரமகுரு**



( முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு )

பிறப்பு : 20.08.1953 இறப்பு : 28.03.2022

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

சுதுமலை தெற்கு,
சாவற்கட்டு.

(C-4082)

குடும்பத்தினர்



# 45 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 08 . 04 . 1955

இறப்பு 13 . 02 . 2022

காத்தவராயன் கூத்து அண்ணாவியார் / கலைஞர்

**அமரர் இளையவி சாம்பசிவம்**

[ மானாங்கானை, வல்வெட்டித்துறை ]

எமது அன்புத் தந்தை இளையவி சாம்பசிவம் அவர்களின் மறைவுச் செய்திகேட்டவுடன் ஓடிவந்த எம் அயலவர்கள், எம் கிராம இளைஞர்கள், நண்பர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம், பதாதைகள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர், எமது ஆலய, கழக சனசமூக மற்றும் யாழ். மாவட்ட முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம், யாழ். வைத்தியசாலைத் தரிப்பிட சாரதிகள், கண்ணீர் அஞ்சலி உரை நிகழ்த்தியோர், தொலைபேசி வாயிலாக தமது இரங்கலை எம்முடன் பகிர்ந்தவர்கள் மற்றும் அவுஸ்ரேலியா, கனடா போன்ற நாடுகளில் உள்ள எமது சகோதர வீடுகளிற்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோர் மற்றும் வேறுபல உதவிகளை புரிந்தோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (29.03.2022) செவ்வாய்க்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய கிரியைகள் மற்றும் மதிய போசன நிகழ்விலும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(10813)

மானாங்கானை,
வல்வெட்டித்துறை.

077 082 5966

குடும்பத்தினர்



# 31 ஆம் நாள் நினைவு தினமும் அந்தியேட்டி அழைப்பும்



திருகோணமலை உயர் நீதிமன்றத்தில்
சுருக்கெழுத்தாளராக பணிபுரிந்த

அமரர்
**தேவசிகாமணி சறோஜினிதேவி**

30.03.2022

பிறப்பு - 20.07.1964
இறப்பு - 28.02.2022

*மீளாத் துயில் கொண்டு எம்மை*
*ஆறாத்துயரில் ஆழ்த்தி சென்றீரோ?*
*கலையாத நினைவுகளுடன்*
*உதிரும் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்*
*பிரார்த்திப்போமாக...*

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4078)

கல்லூரிவீதி,
பருத்தித்துறை.

077 913 8996

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் தாழ்த்தாது ஆளுமை மிக்கவர்களிடம் நாட்டை ஒப்படையுங்கள் - எரான் வலியுறுத்து



(கொழும்பு)

**உலகில் பணவீக்கம் உயர்மட்டத்திலுள்ள நாடுகளில் இலங்கை முன்னிலையிலுள்ளது. பொருட்களின் விலை உயர்வினை சமநிலைப்படுத்துவதற்காக நாணயத்தாள்களை அச்சிடுவதால் தீர்வு காண முடியும் என அரசாங்கம் எண்ணுகிறது**

அரசாங்கத்தின் இந்த தீர்மானமே நாட்டில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கான காரணமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உலகில் பணவீக்கம் உயர் மட்டத்திலுள்ள நாடுகளில் இலங்கை முன்னிலையிலுள்ளது. கடந்த காலங்களை விட பொருட்களின் விலைகள் மூன்று மடங்கு அதிகரித்துள்ளன. இரு ஆண்டுகளுக்குள் அந்நிய செலாவணி இருப்பு 80 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநராக அரசியல்வாதியொருவரை நியமித்தமையே இதற்கான காரணமாகும். நிதி அமைச்சர் , திறைசேரி செயலாளர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்ட நிதி முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பதவிகளுக்கு தகுதியானவர்களை நியமிக்கும் வரை நாடு ஒருபோதும் முன்னேற்றமடையாது.

இனியும் நாட்டை முறையாக நிர்வகிக்க முடியவில்லை எனில் அதனை ஏற்றுக்கொண்டு இயலுமையுடையவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்துச் செல்லுமாறு மீண்டும் மீண்டும் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

உலகிலேயே அதிகளவு கடன் பெற்றுள்ள நாடு அமெரிக்கா . ஆனால் அந்நாட்டில் எரிபொருள் வரிசையோ அல்லது எரிவாயு வரிசையோ இல்லை. அதற்கு காரணம் சிறந்த நிதி நிர்வாகமாகும்.

அமெரிக்காவை உதாரணமாகக் கொண்டு அவதானிக்கும் போது கடன் பெறுவது பிரச்சினையல்ல. பெற்றுக் கொள்ளும் கடன் தொகையை எவ்வாறு பயன்படுத்துகின்றோம் என்பதே முக்கியத்துவமுடையதாகும்.

இலங்கையில் பொருளாதார வளர்ச்சி வேகத்தை விட , நாணயத்தாள்களை அச்சிடும் வேகம் அதிகமாகவுள்ளது. பொருட்களின் விலைகளை அதிகரித்ததோடு மாத்திரமின்றி , அவற்றுக்கு அதிகமாக பணம் அச்சிடப்பட்டமையே நாட்டில் தற்போதுள்ள பெரும் பிரச்சினையாகும் . என எரான் தெரிவித்தார். (நி-5)

## எல்லா வகைக்குருதிகளுக்கும் தட்டுப்பாடு குருதிக் கொடையாளர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் எல்லா வகைக் குருதிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாத ஆபத்தான நிலையில் இரத்த வங்கி உள்ளதாக யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவினர் தெரிவித்தனர்.

இரத்த வங்கியில் சராசரியாக இருக்க வேண்டிய குருதியின் அளவு 330 பைந் ஆகும். ஆனால் தற்போது இரத்த வங்கியில் 167 பைந் குருதி மட்டுமே இருக்கின்றது. இது இன்னும் நான்கு நாட்களில் முடிந்துவிடும். சராசரியாக நாளொன்றிற்கு 35 - 40 பைந் குருதி நோயாளர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

இரத்ததானம் செய்வதற்கான அடிப்படை தகுதிகளாக , 18 - 55 வயது வரை ஏற்கனவே இரத்ததானம் செய்திருந்தால் அவர்கள் 60 வயது வரை இரத்ததானம் செய்யலாம். குறைந்தது 50 கிலோ நிறையை கொண்டிருத்தல், ஈமோகுளோபினின் அளவு 12.5 g ஆக இருத்தல், ஏற்கனவே இரத்ததானம் செய்திருந்தால் 4 மாதங்கள் பூர்த்தியாக வேண்டும் .கொரோனா தடுப்பூசி ஏற்றியிருந்தால் 7 நாட்களின் பின்னர் இரத்ததானம் செய்யலாம் என்பன குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் அல்லது இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்ய விரும்புபவர்கள் 077 210 5375 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு உயிர் காக்கும் பணியில் இணைந்து கொள்ளுமாறு இரத்த வங்கிப்பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது. (நி-5-18-33-104)

## எரிபொருள் வரிசையில் அதிகரிக்கும் மரணங்கள்!

(கொழும்பு)

அத்துருகிரிய பகுதியில் கடந்த 26 ஆம் திகதி எரிபொருள் கொள்வனவு செய்ய வரிசையில் நின்ற 85 வயதான நபரொருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருளை நிரப்புவதற்காக வரிசையில் நின்ற தருணத்தில் ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக, அவர் அத்துருகிரிய பிரதேச மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்த நபர், இருத நோயினால் பாதிக்கப்பட்டவர் என குறிப்பிடப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அத்துருகிரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5)





இலங்கை - இந்திய நட்புறவின் சின்னமாக இந்திய அரசின் 1.6 பில்லியன் நிதியுதவில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரால் நேற்று காணொளி முறையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்.மாநகர முதல்வர், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், மதகுருமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன்போது பல கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. யாழ்ப்பாண பண்பாட்டு மையம் வெகுவிமரிசையாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியினால் திறந்து வைக்கப்பட்ட பின்னரே பொதுமக்கள் பாவனைக்காக கையளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (படங்கள்- சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி வடிவாம்பிகை குகேந்திரன்

(ஓய்வுபெற்ற இலிகிதர் -
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி)

சிற்றம்பலம் வீதி, மீசாலை கிழக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வடிவாம்பிகை குகேந்திரன் நேற்று (28.03.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் வைரமுத்து - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வைரமுத்து குகேந்திரனின் அன்பு மனைவியும் கஜானியின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி (கனடா), சரஸ்வதி, தவமணி, மங்கையற்கரசி, கணேசமூர்த்தி (நெதர்லாந்து), அமிர்தாம்பிகை (கனடா) ஆகியோரின் சகோதரியும் சிதம்பரநாதன், வசந்தகுமாரி, யோகசுந்தரம், சுகந்தகுமாரி, கணேசநாதன், நந்தகுமாரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.03.2022) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே:- 077 285 2967

(C-4083)

# குஜராத்துக்கு முதல் வெற்றி



'ரி20' தொடரில் முதல் வெற்றி பெற்றது குஜராத். நேற்று நடந்த போட்டியில் லக்னோவை 5 விக்கெட்டில் வென்றது.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நேற்று மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் குஜராத் - லக்னோ அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களை எடுத்தது.

தீபக் ஹூடா 55 , ஆயுஷ் பதோனி 54 ஓட்டங்கள் எடுத்தனர்.

குஜராத் சார்பில் மொஹமட் ஷமி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். வருண் ஆரோன் 2, ரஷித் கான் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

159 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய குஜராத் அணிக்கு, தொடக்க ஆட்டக்காரர் சுப்மன் கில் டக் அவுட்டாகி அதிர்ச்சி கொடுத்தார். அடுத்து இறங்கிய விஜய் சங்கர் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா 28 பந்துகளில் ஒரு சிக்சர், 5 பவுண்டரி உட்பட 33 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் மத்யூ வேட் 30 ஓட்டங்களில் வெளியேறினார்.

குஜராத் அணி ஒரு கட்டத்தில் 78 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது.

அடுத்து இறங்கிய டேவிட் மில்லர், ராகுல் தெவாடியா அதிரடியாக ஆடினர். மில்லர் 30 ஓட்டங்களில் வெளியேறினார்.

இறுதியில், குஜராத் அணி 5 விக்கெட் இழப்புக்கு வெற்றிக்கு தேவையான ஓட்டங்களை எடுத்து ஐபிஎல் தொடரில் முதல் வெற்றியைப் பதிவு செய்தது. (ம)

# INVITATION FOR BID (IFB I)

## Nallur Pradeshiya Sabha

**Local Development Support Project -PT-1 - CREDIT NUMBER – P-163305**
**IMPROVEMENTS OF KARAIMUNANGU CREMATORIUM AT ARIYALAI**
**(LDSP/PT-1/NP/JAF/NPS/2022/04/KAR-CRE)**

[1]. The Democratic Socialist Republic of Sri Lanka has received loan from the World Bank towards the cost of the Local Development Support Project and intends to apply part of the proceed of this loan to payments under the contract named below.

[2]. The Chairman, Local Authority Procurement Committee on behalf of **Nallur Pradeshiya Sabha, Jaffna, Northern Province** invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.

[3]. Bidding will be conducted through National Competitive Bidding Procedure. The Ministry of finance circular no 03/2020 dated 09.10.2020 & circular no 03/2020 (i) dated 11.01.2021 will also befollowed.

[4]. Interested eligible bidders may obtain further information from **The Chairman, Pradeshiya Sabha, Nallur. (Tel. No 021-2222700, Fax 021-2220138 e.mail – npsnallur@gmail.com)** and inspect the bidding documents at the same address on any working days 09:00 hrs. to 15:00 hrs. from 29th March 2022 until 19th April2022.

[5]. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule 5 of the biddingdocument.

[6]. To be eligible for contract award the successful bidders shall not have been blacklisted by Ministry of finance or World Bank or any other acceptable Institutions and Domestic Contractors shall have been registered in the field of **Building** Construction for grade mentioned in the table below with the Construction Industry Development Authority (CIDA)

[7]. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Nallur Pradeshiya Sabha**, 14/5, Karuvepulam Road, Kokuvil. from 29th March 2022 until 19th April 2022 from 09:00 hrs. to 15:00 hrs. on working days upon payment of a nonrefundable fee of Rs. **2,000.00** The method of payment will be by cash.

[8]. Bids shall be delivered in Original & Duplicate to the address below **on or before 10.00 hrs. on 20th April 2022.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders, bidders' representatives who choose to attend. Bids must be accompanied by a bid security as per the information given in the tablebelow.

[9]. Pre bid meeting will be held on 6th April 2022 at 10:00 hrs. at Conference hall at Nallur Pradeshiya Sabha, Interested bidders may attend the pre-bid meeting at their own expenses.

| No | Contract No | Description of work | Estimated CivilCost Rs (Million) | Contract Period | Required Grade | Validity Period of bid from the last date of the Bid submission | Required Bid security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Validity Period | Security Amount (Rs) | Validity Period |
| 01 | LDSP/PT-1/NP/JAF/NPS/2022/04/KAR-CRE | IMPROVEMENTS OF KARAIMUNANGU CREMATORIUM AT ARIYALAI | 2.700 | 90 Days | C8 or Above (Building) | 63 Days | 28,000.00 | 20.07.2022 |

**Chairman,**
Local Authority Procurement Committee,
Nallur Pradeshiya Sabha.

(C-4076) 29.03.2022

# Professor Chellathurai Sivagnanasundram

## Memorial Lecture 2022

**(Emeritus Professor of Community Medicine and Former Dean of the Faculty of Medicine)**

By

**Dr. R.Surenthirakumaran,**
Dean/Faculty of Medicine,
University of Jaffna

On

**"Community Based Medical Education: Prospects and Challenges"**

On

Wednesday 30th March 2022 at 3.30 p.m
at the Hoover Auditorium,
Faculty of Medicine,
University of Jaffna

All are cordially invited.
Kindly follow the precautionary measures for COVID 19 when participating.

**Registrar,**
University of Jaffna,
Sri Lanka.
29.3.2022

(C-4077)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முதலீடு செய்ய வேண்டாம்

# புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

**இலங்கை ஜனாதிபதி புலம்பெயர் தமிழர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்நிலையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே லண்டனில் நேற்று புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**



இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் புலிக்கொடிகள், உக்ரைன் கொடிகள் மற்றும் இலங்கையில் முதலீடு செய்ய வேண்டாம் என்ற பாதகைகளையும் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

புலம்பெயர் தமிழர்களின் இந்த போராட்டத்தில் லண்டனில் வசிக்கும் சில சிங்களவர்களும் இணைந்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது இலங்கையில் முதலீடு செய்வது எவ்வளவு ஆபத்தானது என்பது தொடர்பாக விளக்கங்களும் கூறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி)


## தவறிவிட்டது

கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இரத்தின கோபால், தவகோபால் என்பவருடைய 501883999v எனும் இலக்கம் உடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய பேர்ஸ் யாழ்.நகரில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். (10817)

தொடர்பு: 075 416 6173

## பணியாளர்கள் தேவை

எமது கல்வி நிறுவனம் கீழ்வரும் பணியாளர்களை எதிர்பார்க்கின்றது!

* வகுப்பு மேற்பார்வையாளர் ஆண்/ பெண்
* கணனிப் பதிவாளர் ஆண்/ பெண்
* சிற்றுண்டிச்சாலை ஊழியர் ஆண்/ பெண்

03.04.2022 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிக்கவும். (சி-4073)

New Science world.
(Navalar Road,
Brown Road Junction Jaffna)

021 221 6690
077 336 4055
077 336 4030


## கடதாசி தட்டுப்பாட்டை நிவர்த்திக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் தலையீட்டுடன் கடதாசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், நாட்டில் கடதாசி உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார். (நி-5)

## நோன்பு காலத்தை முன்னிட்டு பேரீச்சம்பழத்திற்கான வரி குறைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நோன்பு காலத்தை முன்னிட்டு பேரீச்சம்பழ இறக்குமதிக்கான விசேட பண்ட வரி குறைக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சு வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரீச்சம்பழ இறக்குமதிக்கான் விசேட பண்ட வரி, 200 ரூபாவாக விதிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், குறித்த வரியானது 199 ரூபாவினால் குறைக்கப்பட்டு, ஒரு ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என நிதியமைச்சு அறிவித்துள்ளது. (நி-5)

## கொழும்பு- மொஸ்கோ விமான சேவைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்புக்கும், ரஷ்யா-மொஸ்கோவிற்கும் இடையிலான விமான சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அறிவித்துள்ளது. (நி-5)

## இராசிபலன்

29.03.2022
பங்குனி 15, செவ்வாய்க்கிழமை
துவாதசி பிற்பகல் 3.13 மணிவரை

அவிட்டம் முற்பகல் 11.56 மணிவரை
சுபநேரம்- 10.43- 12.13 மணிவரை
இராகுகாலம் -3.13- 4.43 மணிவரை

பிரதோச விரதம்,
சந்திராஷ்டமம்,புனர்பூசம்,பூசம்

வளவன்

**மேஷம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மிதுனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**சிம்மம்** மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் அன்னியோன்னியம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** மறைமுகப் போட்டிகள் மாறும், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.

**துலாம்** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வளர்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**தனுசு** ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய விடயம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் , காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்

**கும்பம்** நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், கற்பனை மிகுதியான நாள்,வழி பாட்டால் மகத்துவம் காணும் நாள்.

**மீனம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், ரோகபயமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கண்ணீர் விடாமல் பார்த்துக் கொள்பவனே உற்ற நண்பன்.

# ஏப்ரல் 28 இற்கு முன்னர் பூஸ்டரை பெற்றுக் கொள்ளுங்கள்

## வவுனியா சுகாதார தரப்பு

**(நெளுக்குளம்)**

**ஏப்ரல் 28 ஆம் திகதிக்கு முன்பதாக அனைவரும் மூன்றாவது தடுப்பூசியை கட்டாயம் ஏற்றிக்கொள்ள வேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் பிரசன்னா தெரிவித்துள்ளார் .**

நேற்று இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் 12 வயதிற்கு மேற்பட்ட மாண வர்களுக்கு பைசர் தடுப்பூசி ஏற்றுவது தொடர்பாக பெற்றோர் களுக்கு தெளிவூட்டும் கல ந்துரையாடலில் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித் துள்ளார் .

20 வயதிற்கு மேற்பட்டவர் களுக்கு மூன்றாவது தடவை தடுப்பூசியை ஏற்றிக்கொள்வது தற்போது இலங்கையில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 12 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டு தடுப்பூசி ஏற்றிக் கொள்வதற்கு அனுமதியளிக் கப்பட்டுள்ளது. பைசர் தடுப்பூசி ஏற்றப்பட்டபோது ஓரிருநாட்க ளுக்கு தலையிடி உடல் அசதி கள் தடுப்பூசி ஏற்றிய கை வலி என்பன ஏற்படும்.

இது அனைத்து வகையான தடுப்பூசிகள் ஏற்றப்படும் போது ஏற்படும் சாதாரண வலிகளே தவிர வேறொன்றும் இல்லை. தற்போதும் நாட்டில் கொரோ னாவினால் பாதிப்புக்கள் ஏற்படு கின்றன. இறப்புக்களும் இடம் பெறுகின்றன.

எனவே எமக்கு வழங் கப்பட்ட சந்தர்ப்பங்களை நாங் கள் உரிய முறையில் பின் பற்றினால் இந்நோயிலிருந்து எம்மையும் எமது குடும்பங்க ளையும் பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவே அனைவரும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்பாக தமக் கான தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளவும் என மேலும் தெரி வித்தார். (4-5-299)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(குப்பிழான்)

புன்னாலைக்கட்டுவன்தெற்கு விவசாய சம்மேளனத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 07 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கணேசா முன்பள்ளி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் புன்னா லைக்கட்டுவன் தெற்கு விவ சாய சம்மேளனத்திற்கு உட் பட்ட அனைத்து விவசாயிக ளையும் தவறாது கலந்து கொள் ளுமாறு மேற்படி விவசாய சம் மேளன நிர்வாகத்தினர் கேட் டுக்கொண்டுள்ளனர். (4-5-18)

## குருபூசை தினம்

(குப்பிழான்)

ஈழத்துச் சித்தர்களில் ஒரு வரான கீரிமலை குழந்தை வேல் சுவாமிகளின் குரு பூசை தின நிகழ்வு நாளை மறு தினம் 31 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 10 மணிக்கு கீரிமலை குழந்தை வேல் சுவாமி சிவாலயத்தில் திருநாவு க்கரசு ஆதீனம் முதலாம் குருமகா சந்நிதானம் சித்தர் வழி திருஞானசோதி அடிகளார் தலைமையில் இடம்பெறவுள் ளது. (4-5-18)

## வாள்வெட்டு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சுதுமலையில் இளைஞன் ஒருவர் மீது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வாள்வெட்டுத் தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது.

குறித்த நபரின் வீட்டினுள், அத்துமீறி இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேர் கொண்ட குழுத் தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்று ள்ளதாக மானிப் பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்ப ட்டுள்ளது. (4-5-33-104)

## ஆண்டு விழாவும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

சரவணை பள்ளம்புலம் ஸ்ரீ முருகன் கூட்டுப்பிரார் த்தனைச் சபையின் 55 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சபை நிறுவு நரைக் கௌரவித்தலும் சிறப்பு மலர் வெளியீடும் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு சர வணை பள்ளம்புலம் முருக மூர்த்தி திருக்கோயில் நால்வர் மணிமண்டபத்தில் இடம்பெறும் என சபையின் தலைவர் பொ.பேரின்ப நாயகம் அறிவித் துள்ளார். (4-5)

### ஒன்றரை மாத காலத்திற்குள்

## பத்து போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் முறியடிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரின் அதிரடி நடவடிக்கை காரணமாக கடந்த ஒன்றரை மாத காலத்திற்குள் பத்து போதைப்பொருள் கடத்தல் மற்றும் கசிப்பு உற்பத்தி நட வடிக்கைகள் முறியடிக்கப்பட்டுள் ளன.

சாவகச்சேரி மதுவரிப் பொறு ப்பதிகாரி ராஜ்மோகனின் வழி காட்டலில்,பரிசோதகர் ரசிகரன் தலைமையிலான குழுவினர் மூன்று கஞ்சா கடத்தல் நட வடிக்கைகள்,5கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள்,ஹெரோயின் கடத்தல் நடவடிக்கை மற்றும் தீர்வை செலுத்தப்படாத சிகரெட் கடத்தல் என பத்து கைது நடவடிக்கைகளை கடந்த ஒன்றரை மாத காலத்திற்குள் முன்னெடுத்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்க ளுக்கு சாவகச்சேரி நீதிமன்றம் ஒரு இலட்சத்து 35ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப் பளித்திருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.(4-5-30)

## தந்தை செல்வா நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 124 ஆவது பிறந்தநாள் நினைவு நிகழ்வு நாளை மறுதினம் 31 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் கலாநிதி.சி.சிறிசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக மனித உரிமை செயற்பாட்டாளர் ஷ்ரீன் அப்துல் ஸரூர் ஆகியோர் கல ந்து கொள்வர். (4-5)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொ ழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் கனணி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் கற்கை நெறிக்கான சான்றிதழைப் பெறு வதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன.

விண்ணப்பதாரி விண்ண ப்ப முடிவுத்திகதியன்று 16-25 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும். விண்ணப்ப முடி வுத் திகதி 2022.04.25 ஆகும்.

விண்ணப்பதாரி க.பொ.த. (சா/த) பரீட்சையில் தோற்றி யிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமை கள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண் ணப்பப்படிவத்தை மாவட்ட முகா மையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவெனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 அல்லது 071 455 3696 எனும் தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட முகா மையாளர் ஞா.தே.இரத்னகு மார் அறிவித்துள்ளார். (4-5)

## இரும்பு திருடி விற்ற இருவர் கைது

(குப்பிழான்)

காங்கேசன்துறை சீமெ ந்துத் தொழிற்சாலையில் இரும்புகளைத் திருடி விற் பனை செய்த குற்றத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

இரும்புகளைத் திருடி விற் பனை செய்தவரும், இடைத் தரகர் ஒருவருமே இவ்வாறு காங்கேசன்துறைப் பொலிஸா ரினால் கைது செய்யப்பட் டனர்.

இரும்பினை விற்பனை செய்தவருக்கு இராணு வச் சிப்பாய்கள் சிலர் இரு ம்பைத் திருடுவதற்கு உதவி கள் வழங்கி வந்துள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்ததை அடுத்து அவர்களுக்கு உதவி வழங் கிய இராணுவச் சிப்பாய்க ளைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸ் தகவல்கள் தெரி விக்கின்றன. (4-5-18-33)

## போதைப்பொருள் வியாபாரம் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

மீசாலை - அல்லாரை பகுதி யில் நேற்று ஞாயிற்றுக் கிழமை போதைப் பொருள் வியாபா ரத்தில் ஈடுபட்டிருந்த இளைஞன் இராணுவ புலனாய்வுப் பிரிவி னால் கைது செய்யப்பட்டு பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறி த்த நபர் கைது செய்யப்பட்டுள் ளார்.

கைது செய்யப்பட்ட இளை ஞனிடம் சாவகச்சேரி பொலி ஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின் றனர். (4-5-33)

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத் தொழில் பயிற்சி அதிகார சபை யின் கீழ் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் கற்கை நெறிக்கான சான்றி தழைப் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி விண்ண ப்ப முடிவுத்திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இரு க்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதி 2022.04.25 ஆகும்.

விண்ணப்பதாரி க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தி யுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த.(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்ப வற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமை யாளர், தேசிய பயிலுநர் கைத் தொழில் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவெனியு, சுண் டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 அல்லது 071 455 3696 எனும் தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட முகா மையாளர் ஞா.தே.இரத்ன குமார் அறிவித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தை என்ற நாடகம் மூலம் தமிழினம் தொடர்ந்து ஏமாற்றப்படுகிறது

## சிவாஜிலிங்கம் ஆதங்கம்



(யாழ்ப்பாணம்)
அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகள் அரசாங்கத்துடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பேச சொன்னால் அவர்களை மத்தியஸ்தம் வகிக்க சொல்லி கூறுங்கள். அதைவிடுத்து எந்தவித சர்வதேச மத்தியஸ்தம் இல்லாமல் அரசாங்கத்துடன் பேச செல்வதென்பது தற்கொலைக்கு ஒப்பானதென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துடனான தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு சுற்று பேச்சுவார்த்தை முடிவிலும் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. இலங்கை அரசாங்கம் எதை ஒப்புக் கொண்டது என்பது தொடர்பாக தமிழ் கூட்டமைப்பே தெரிவிக்கின்றது. ஆனால் அரசாங்கம் பேச்சுவார்த்தை தொடர்பாக எதனையும் கூறவில்லை. இலங்கையில் எதுவாக இருந்தாலும் சர்வதேச அழுத்தத்தின் மூலம் எமக்கு கிடைக்கும். அதை நோக்கி நாம் பயணிக்க வேண்டும்.

இன்றைய நெருக்கடியில் இருந்து தப்பிப்பதற்காக அரசாங்கம் பேச்சு நடத்துமாக இருந்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உடன்படக் கூடாது. பேச்சுவார்த்தை என காலத்தை ஓட்டிக்கொண்டு செல்லாமல் நிகழ்ச்சிநிரலை தயாரித்து செயற்பட வேண்டும். இல்லையேல் ஈழத் தமிழினம் தொடர்ந்தும் ஏமாற்றப் படும் என்ற கதையாகத்தான் இருக்கும்.

தண்டனை விதிக்கப்பட்டு மேல்முறையீடு செய்யாதுள்ளவர்களுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க முடியும். இதில் உள்ள பிரச்சனை என்றால் சிலர் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையீடு செய்தவர்கள் மாத்திரம் அதனை மீளப் பெற்றால் அவர்களுக்கான பொது மன்னிப்பை ஜனாதிபதியால் வழங்க முடியும்.

ஆகவே இதை செய்வதற்கு ஒரு வாரம் இரண்டு வாரங்களுக்கு மேல் எடுக்க போகின்றீர்கள் என்றால் அது வருத்தத்திற்குரியது. காணி சுவீகரிப்பு தொடர்பாக ஜனாதிபதிக்கும் இராணுவத் தளபதிக்கும் புலனாய்வு அறிக்கை செல்லவில்லை என்றால் அதனை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என அவர் தெரிவித்தார். (நி-5)

# குறுகிய காலத்தில் 18 ஆயிரம் கிலோ தங்கத்தை விற்ற அரசாங்கம்

(கொழும்பு)
இலங்கையின் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது இலங்கை மத்திய வங்கியின் கையிருப்பில் இருந்த 19 ஆயிரம் கிலோ கிராம் தங்கம் தற்போது ஆயிரம் கிலோ கிராமாக குறைந்துள்ளதாக தெரிய வருகிறது.

தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் 18 ஆயிரம் கிலோ கிராம் தங்கம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அஜித் நிவாட் கப்ரால் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக பதவிக்கு வந்து குறுகிய காலத்தில் 5 ஆயிரம் கிலோ கிராம் தங்கம் விற்பனை செய்யப்பட்டுள்ளது என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் கலாநிதி டப்ள்யூ.ஏ. விஜேவர்தன தெரிவித்துள்ளார். (நி-5)

# ஒரு கிலோ அரிசி 300 ரூபாவாக அதிகரிக்கும்

## அரிசி உற்பத்தியாளர் சங்கம்

(கொழும்பு)
தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் அரிசி ஒரு கிலோ கிராம் 300 ரூபாவாக அதிகரிக்கும் என ஐக்கிய அரிசி உற்பத்தியாளார்கள் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், எதிர்காலத்தில் அரிசி கொள்வனவுக்காக வரிசையில் காத்திருக்கும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# சாரதி அனுமதிப் பத்திரம் அச்சிடுவது இடைநிறுத்தம்

(கொழும்பு)
நாட்டில் நிலவும் டொலர் நெருக்கடி காரணமாக சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். (நி-5)

# பிரதமர் பதவியை ரணிலுக்கு வழங்கும் அளவுக்கு அரசு வங்குரோத்து நிலையை அடையவில்லை

## அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன

(கொழும்பு)
ரணில் விக்கிரமசிங்கவிற்கு பிரதமர் பதவியை வழங்கும் நிலைக்கு அரசாங்கம் வங்குரோத்து அடையவில்லை என அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பசில் ராஜபக்ஷவை வீழ்த்துவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். அது நடக்காது. இந்த நெருக்கடி நிலையில் இருந்து நாம் மீண்டெழுவோம் என அபேகுணவர்த்தன தெரிவித்தார். (நி-5)

# கூட்டமைப்பு விரித்துள்ள சதிகார வலைக்குள் ஜனாதிபதி சிக்கக்கூடாது

## பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர

(கொழும்பு)
"விடுதலைப் புலிகளால் முடியாமல் போன ஈழக் கனவை அடைவதற்குத் தமிழ் புலம்பெயர் தமிழர்கள் முயற்சிக்கின்றனர். அதற்கான நகர்வுகளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது. கூட்டமைப்பு விரித்துள்ள சதிகார வலைக்குள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிக்கக்கூடாது." என தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது, "நாட்டின் தற்போதைய நெருக்கடி சூழ்நிலையைப் பயன்படுத்தி தமது இலக்குகளை அடைவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கிறது. இதன்காரணமாகவே ஜனாதிபதியுடன் கூட்டமைப்பினர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

எதற்காக விசேட நிதியம் உருவாக்கப்பட வேண்டும்? ஈழம் என்ற இலக்கை அடைய வியூகம் வகுக்கப்படுகிறது. இதற்காகவா எமது படையினர் உயிர்களைத் தியாகம் செய்தனர்? எனவே, கூட்டமைப்பு விரித்துள்ள சதிகார வலைக்குள் ஜனாதிபதி சிக்கக்கூடாது" என அவர் தெரிவித்தார். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கி.பா:28 ¼ சூரி 3 செவ் 11 இல்
உயரம் :5'7"
தகைமை/தொழில்: சாரதி (கனடாசிற்றிசன்)
எதிர்பார்ப்பு: A/L இற்கு மேல் படித்த பெண்
தொ.இ: B/12441

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருகோணம் 4
கி.பா:31 ½ சூரி 10 செவ் 8 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:Bcom இறுதி ஆண்டு AAT கணக்காளர் (தனியார்)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/12447

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 2
கி.பா: சூரி 1 செவ் 8 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்:AL Mechanical Engineer Tesco Company (UK)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12450

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா: சூரி 8 செவ் 9 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: சுவிஸ் அஞ்சல் அலுவலகர்
எதிர்பார்ப்பு: படித்த பிள்ளைகள் இல்லாத விவாகரத்துப்பெற்றவர் விரும்பத்தக்கது
தொ.இ: B/12454

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1968 இந்து
நட்சத்திரம்: பூனர்பூசம்
கி.பா: சூரி 3 செவ் 2
தகைமை/தொழில்: சாதாரணபடிப்பு
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த மணமகன்
தொ.இ:G/9348

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா:24 ¾ சூரி 1 செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:LLB (Uk) Now External student (Law College). Management Assistant World Bank Project.
எதிர்பார்ப்பு: Engineer,Doctor,M.Sc விரும்பதக்கது
தொ.இ:G/9352

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 40 சூரி 5 செவ் 7 இல்
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு :சுயதொழில்
தொ.இ:G/9363

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம் :-உத்தரட்டாதி
கி.பா: சூரி 11செவ் 7
தகைமை/தொழில்: MscLecturer (அரசதற்காலிக)
எதிர்பார்ப்பு: வைத்தியர் பொறியியலாளர்
தொ.இ:G/9376

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாரதம்



கொரோனா வைரஸ் தொற்று நோய்த்தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உலகின் மிகப்பெரிய அளவிலான முகக் கவசத்தை தாய்வான் நாட்டைச் சேர்ந்த மருத்துவ நிறுவனம் உருவாக்கி கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

## முகநூல் தரிசனம் 06

### ஜெயித்தவர்களிடம் அப்படி என்ன தான் இருக்கிறது..?



சாதிக்க வேண்டும் என்ற சபதம் இருக்கிறது.

வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வைராக்கியம் இருக்கிறது.

வென்று காட்ட வேண்டும் என்ற வீம்பு இருக்கிறது.

அடைவதற்கு என்று ஒரு லட்சியம் இருக்கிறது.

அந்த லட்சியத்தில் ஒரு தீவிரம் இருக்கிறது.

வாய்ப்பு எங்கே எங்கே என்று தேடுகின்ற தாகம் இருக்கிறது.

வாய்ப்பு வரவில்லை என்றால் அதை உருவாக்கும் திறமை இருக்கிறது.

உணவு, உறக்கம் இவற்றைக்கூட ஒதுக்கி வைக்கும் உழைப்பு இருக்கிறது.

தடை, தாமதம்

தோல்வி எது வந்தாலும் சமாளிக்கும் தாராள மனம் இருக்கிறது.

அடிமேல் அடிபட்டாலும் அடுத்த அடியை எடுத்து வைக்கும் துணிச்சல் இருக்கிறது.

தங்கள் தகுதிக்கும், திறமைக்கும் சரியான தீனி எங்கே எங்கே என்கிற தேடல் இருக்கிறது.

சூழ்நிலைக்குத் தகுந்தபடி அனுசரித்துப்போகும் அடக்கம் இருக்கிறது.

விமர்சனத்தைச் சரியான விதத்தில் எடுத்துக்கொள்ளும் விவேகம் இருக்கிறது.

அறிவு , ஆற்றல்

ஆதரவுகள் அனைத்தையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் மூளை இருக்கிறது.

குறிக்கோள் நோக்கிய வேலைகளுக்கு மட்டுமே நேரத்தை அதிகமாய் ஒதுக்கும் அக்கறை இருக்கிறது.

கடமைகள் காத்துக் கிடக்க, பொழுது போக்குகளில் புத்தியை செலுத்தாத பொறுப்பு இருக்கிறது.


நேற்றைவிட இன்று எவ்வளவு வளர்ந்தோம் எனஅளந்து அறியும் ஆர்வம் இருக்கிறது.

அத்தனைக்கும் அடிப்படையாய் அசைக்க முடியாத தன்னம்பிக்கை இருக்கிறது...

# குண்டு மழைக்கு மத்தியில் கங்காருவை காப்பாற்றிய தன்னார்வலர்

## குவியும் பாராட்டுக்கள்





(கீவ்)

உக்ரைனில் எரிந்து கொண்டு இருக்கும் வன விலங்குகள் உயிரியல் பூங்காவில் இருந்து எட்டு கங்காருகளை தன்னார்வலர் ஒருவர் காப்பாற்றி இருப்பது அனைவரின் பாராட்டுகளையும் பெற்றுவருகிறது.

உக்ரைனில் ரஷ்ய படைகள் அத்துமீறி ஒரு மாதத்திற்கும் மேலாக தீவிர ஆயுத தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் உக்ரைனின் பெரும்பாலான நகரங்கள் ஏவுகணைகள் மற்றும் டாங்கிகளால் தாக்கப்பட்டு முழுமையாக சேதமடைந்துள்ளன.

அந்த வகையில், உக்ரைனின் கார்க்கிவ் நகரில் உள்ள ஃபெல்மேன் உயிரியல் பூங்காவிற்கு அருகில் ரஷ்ய படையினர் நடத்திய தாக்குதலினால் பூங்காவை சுற்றியுள்ள பகுதியில் பெரும் தீ விபத்து ஏற்பட்டு அங்குள்ள விலங்குகளின் உயிர்களை பெரும் ஆபத்திற்குள் தள்ளியுள்ளது.

இந்த நிலையில், உயிரியல் பூங்காவில் ,உயிருக்கு போராடிக் கொண்டு இருந்த 8 கங்காருகளை தன்னார்வலர் ஒருவர் காப்பாற்றி தனது வாகனத்தில் பாதுகாப்பாக அழைத்துச் சென்று இருப்பது பெரும் பாராட்டை பொதுமக்கள் மத்தியில் பெற்று வருகிறது. (நி-5)

# மிகவும் சக்திவாய்ந்த தாக்குதல் வழிமுறைகளை உருவாக்க வடகொரியா திட்டம்



(பியங்கியாவ்)

மிகவும் சக்திவாய்ந்த தாக்குதல் வழிமுறைகளை உருவாக்க வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் திட்டமிட்டுள்ளதாக அதிகார பூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு முதல் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை ஏவி வரும் வடகொரியா, தனது ஆயுதக் களஞ்சியத்தை நவீனமயமாக்கும் முயற்சியில் கூடுதல் ஏவுகணை சோதனைகளை நடத்தலாம் அல்லது அணு ஆயுதத்தை விரைவில் சோதிக்கலாம் என்ற அச்சத்திற்கு மத்தியில் இந்த செய்தி வெளிவந்துள்ளது.

எந்தவொரு அச்சுறுத்தலையும் சமாளிக்கும் வகையில் நாட்டின் தாக்குதல் திறனை வளர்ப்பதற்கான உறுதியை கிம் வெளிப்படுத்தியதாக, கேசிஎன்ஏ தெரிவித்துள்ளது.

'அதிகமான தாக்கும் திறன்கள், யாராலும் தடுக்க முடியாத அமோகமான இராணுவ பலம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் போது மட்டுமே, ஒரு போரைத் தடுக்க முடியும். இதன்மூலமே நாட்டின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க முடியும். மேலும் ஏகாதிபத்தியவாதிகளின் அனைத்து அச்சுறுத்தல்களையும் கட்டுப்படுத்தவும் முடியும்' என கிம் கூறியதாக கேசிஎன்ஏ செய்தி வெளியிட்டுள்ளது.

'வடகொரியா கடந்த வியாழக்கிழமை நடப்பு ஆண்டின் 12 ஆவது ஆயுத சோதனையை நடத்தியது. புதிதாக உருவாக்கப்பட்ட, நீண்ட Hwasong-17 கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை அறிமுகப்படுத்தியது.

இது அமெரிக்காவில் எந்த பகுதியையும் தாக்கும் வல்லமை கொண்டது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சோமாலியாவில் கடும் வறட்சி

## உணவு, தண்ணீர் இன்றி 4.3 மில்லியன் மக்கள்

(மொகடிஷ்)

**40 ஆண்டுகளில் இல்லாத மோசமான வறட்சியால் சோமாலிய மக்கள் கடுமையான பட்டினியை எதிர்கொண்டுள்ளனர். நான்கில் ஒருவர் பட்டினியால் அவதிப்படுவதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.**



சுமார் 4.3 மில்லியன் மக்கள் உணவு, தண்ணீர், இருப்பிடமின்றி சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

கடந்த நவம்பர் மாதம் கடும் வறட்சி காரணமாக சோமாலிய அரசு அவசர நிலையை அறிவித்தது.

எனினும், 5 மாதங்கள் கடந்தும் அங்கு நிலைமை சீராகவில்லை.

சோமாலியாவில் நிலையான அரசு அமையாதமை, தொடர்ந்து நடைபெறும் உள்நாட்டு சண்டைகள், மழையின்மை ஆகியன கடும் வறட்சிக்கு காரணமாகியுள்ளன.

கடந்த சில வருடங்களில் மாத்திரம் சோமாலியாவில் இரண்டரை இலட்சம்பேர் பட்டினியால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# புடின் தொடர்ந்து அதிகாரத்தில் நீடிக்க முடியாது ஜோ பைடனின் கருத்துக்கு ரஷ்யா கண்டனம்

(மொஸ்கோ)

ஜனாதிபதியாக விளாடிமிர் புடின் தொடர்ந்து அதிகாரத்தில் நீடிக்க முடியாது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்த கருத்திற்கு, ரஷ்ய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

அரசுமுறைப் பயணமாக போலந்து சென்ற ஜோ பைடன், புடின் தொடர்பாக மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். இதற்கு, ரஷ்யாவில் ஆட்சி மாற்றம் தொடர்பாக பைடன் பேசவில்லை என்றும் அண்டை நாடுகளின் மீது புடின் அதிகாரம் செலுத்துவதைத் தடுக்க வேண்டும் என்பதை தான் பைடன் அவ்வாறு பேசிய



தாக வெள்ளை மாளிகை விளக்கம் அளித்திருந்தது.

இந்நிலையில், ரஷ்ய நாட்டின் ஜனாதிபதியை பைடன் முடிவு செய்யக் கூடாது என்றும் மக்கள் தான் ஜனாதிபதியை தேர்வு செய்வார்கள் என்றும் புடினின் செய்தித் தொடர்பாளர் பெஸ்கோவ் தெரிவித்துள்ளார். (நி-5)

# கொரியாவைப் போல உக்ரைனை இரண்டாகப் பிரிக்க ரஷ்யா முயற்சி

(கீவ்)

கொரியாவைப் போல உக்ரைனை இரண்டாகப் பிரிக்க ரஷ்யா முயல்வதாக உக்ரைன் நாட்டு இராணுவ உளவுத்துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள உக்ரைன் இரா ணுவ உளவுத் துறையின் தலைவர் கைரைலோ புடனோவ், 'உக்ரைனில் 'வடகொரியா, தென் கொரியா' போல ஒரு பிளவை உருவாக்க ரஷ்யா முயல்கின்றது. ரஷ்யப் படையெடுப்பு பெரிய அளவில் தடுக்கப்பட்டுள்ள நிலையில், உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் மட்டும் புடின் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்த இரண்டு பகுதிகளையும் ரஷ்யாவால் இணைக்க முடியுமானால், கொரிய போருக்குப் பிறகு நிகழ்ந்ததைப் போல இந் தப் பகுதியையும் உக்ரைனின் பிற பகுதிகளையும் பிரிக்கும் ஒரு கோட்டினை உருவாக்க புடின் முய ல்வார். விரைவில் ரஷ்ய ஆக்கிரமிப்புப் பகுதிகளில் உக்ரைன் கொரில்லா தாக்குதலில் ஈடுபடும் எனத் தெரிவித்தார். (நி-5)

# 6 ஒஸ்கார் விருதுகளை தட்டிச் சென்ற 'டியூன்' திரைப்படம்

(வோஷிங்டன்)

அமெரிக்க திரைப்படம் 'டியூன்' 6 ஒஸ்கார் விருதுகளை தட்டிச் சென்றது.

நடப்பாண்டிற்கான 94 ஆவது ஒஸ்கார் விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நேற்று நடைபெற்றது.

டெனிஸ் வில்லெனு இயக்கிய அமெரிக்க திரைப்படமான "டியூன்" திரைப்படம், சிறந்த விஷுவல் எபெக்ட்ஸ், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த தயாரிப்பு, வடிவமைப்பு, சிறந்த பின்னணி இசை, சிறந்த






படத்தொகுப்பு, சிறந்த ஒலி ஆகிய 6 பிரிவுகளில் ஒஸ்கார் விருதுகளை தட்டிச் சென்றுள்ளது. (நி-5)

# நேரடி சந்திப்பை நிராகரித்த ரஷ்யா

(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கும் உக்ரைனிய ஜனாதிபதி ஜெலன்ஸிக்கும் இடையில் தற்போதைய நிலையில் நேரடி பேச்சுவார்த்தை நடத்தப்படுவது காத்திரமானதாக இருக்காது என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

அவ்வாறான பேச்சுவார்த்தை எதிர்பார்ப்பதை விட எதிர்விளைவையே ஏற்படுத்தும் என்று ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் சேர்பிய ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

நடைமுறை போர் தொடர்பில் இருவரும் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளும்போது அது எதிர்விளைவைத் தரும். இரண்டு தரப்பினருக்கும் இடையில் முக்கிய விடயங்களில் உடன்பாடுகள் எட்டப்பட்ட பின்னர், இரண்டு தலைவர்களுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெறுவதே சிறந்தது என்று லாவ்ரோவ் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக ரஷ்ய ஜனாதிபதியுடன் நேரடி சந்திப்பு நடத்தப்பட வேண்டும் என்று உக்ரைன் ஜனாதிபதி வலியுறுத்தியிருந்த நிலையிலேயே ரஷ்யாவின் இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த வாரத்தில் உக்ரைனுக்கும் ரஷ்யாவிற்கும் இடையே துருக்கியில் நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தை பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்று தாம் விரும்புவதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் மீதுள்ள அக்கறை எங்கள் மீது காட்டப்படவில்லை

## ஐ.நாவை சாடும் உறவுகள்

(பனிக்கன்குளம்)

**உக்ரைன் யுத்தத்தை பெரிதாக நோக்கும் ஐ.நா. அதைவிட பாரதூரமான பிரச்சினையாக உள்ள எமக்கான தீர்வை வழங்க வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.**

கடந்த 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மட்டுவில் பகுதியில் பொலிஸாரின் தாக்குதலில் காயமடைந்து வீட்டில் சிகிச்சையில் உள்ள மரியசுரேஷ் ஈஸ்வரி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் எங்களுடைய உறவுகளைத்தேடியே போராட்டத்தை மேற்கொள்கிறோம். 49 ஆவது கூட்டத்தொடர் ஐ.நாவில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே இதுவரை கிடைத்த தகவலின்படி அதிலும் எந்தவிதமான தீர்வுகளும் இல்லை. அவர்களும் எங்களை திரும்பிப் பார்ப்பதும் இல்லை. உக்ரைன் சண்டையை விட மோசமான நிலைப்பாடு இங்கு இங்கிருக்கின்றது.

உக்ரைன் மீது இவ்வளவு தூரம் அக்கறை காட்டுபவர்கள் எமது தமிழ் மக்கள் மீது அக்கறை காட்டவில்லை.

எமக்கான நீதி பெற்றுத் தரப்படவேண்டும். சர்வதேச சமூகத்தில் உள்ள வர்களும் சரியான பாதையில் சென்று எங்களுடைய மக்களுக்கு நீதி தருவதற்கு உரிய தரப்புகளிடம் சர்வதேசத்தில் கதைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (4-5-281)

# இலங்கைக்கு கடல் அட்டைகளை கடத்த முயன்ற மூவர் கைது

## பயன்படுத்திய படகும் மீட்பு



(மன்னார்)

இராமநாதபுரம் மாவட்டம் புதுப்பட்டிணம் கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கடல்வழியாக கடல் அட்டைகளை படகு மூலம் இலங்கைக்கு கடத்த இருந்த நிலையில் கடல் அட்டைகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுங்கத் துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இக்கைது நடவடிக்கை இடம்பெற்றதோடு குறித்த படகையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்களை தடுத்து வைத்து நடத்திய விசாரணையில் கடல்வழியாக படகு மூலம் இலங்கைக்கு 700 கிலோ கடல் அட்டைகளை கடத்த இருந்தமை தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை வனத்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-285)

# சீரற்ற நிலையில் இறங்குதுறை மீனவர்கள் சிரமம்



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்கு உட்பட்ட முழங்காவில் சென்.செபஸ்ரியார் இறங்குதுறையை புனரமைத்து தருமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரையோரப் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் உள்ள மீன்பிடி இறங்கு துறை நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் தாங்கள் தொடர்ந்தும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

கடற்றொழில் உபகரணங்களை தொழிலுக்கு கொண்டு செல்வதற்கும் மீன்பிடிப் படகுகளை துறைகளில் வைத்து பாதுகாப்பதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் குறிப்பிட்டனர். குறிப்பாக கடல் வற்றுக் காலங்களில் கடற்றொழில் உபகரணங்களை நீண்ட தூரம் காவிச் சென்று தொழிலுக்கு செல்வதும் பின்னர் கடற்றொழில் உபகரணங்களை கரை சேர்ப்பதற்கும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர். (4-5-315)

# இலங்கை கடற்பரப்பில் மீனவர்களை மிரட்டி கொள்ளை

(சென்னை)

மீன்பிடிக்கச் சென்ற பத்து மீனவர்களை கத்தி போன்ற ஆயுதங்களை காட்டி மிரட்டி பொருட்களைக் கொள்ளையிட்ட சம்பவம் ஒன்று இலங்கை கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தின் ஆறுகாட்டுத் துறையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற பத்து மீனவர்களையே இவ்வாறு கத்தி போன்ற ஆயுதங்களை காட்டி மிரட்டி பொருட்களை கொள்ளையடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் குறித்து வேதாரணியம் கடலோரப் பாதுகாப்பு குழும பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4-5-100)

# யானைக்குட்டி உயிரிழப்பு

(நெளுக்குளம்)

வவுனியா ஆச்சிபுரம் பகுதியில் பப்பாசிதோட்டத்தில் வாய்ப்பகுதியில் காயங்களுடன் காணப்பட்ட யானைக்குட்டி உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த தோட்டத்திற்குள் நுழைந்த 6 வயது மதிக்கத்தக்க யானைக்குட்டி உணவருந்த முடியாத நிலையிலும், தோட்டத்திலிருந்து செல்ல முடியாத நிலையிலும் காணப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற வடமாகாண கால்நடை மருத்துவர் தலைமையிலான குழுவினர் வெங்காய வெடியினை உட்கொண்டதனாலேயே யானைக்குட்டி உணவருந்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்ததோடு, யானைக்குட்டிக்கான சிகிச்சையையும் மேற்கொண்டனர். எனினும் குறித்த யானைக்குட்டி சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்துள்ளது. (4-5-299)

# விவசாய வீதி புனரமைப்பு தொடர்ந்து முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த விவசாய வீதிகளின் புனரமைப்பு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றான வன்னேரிக்குளத் தின் கீழுள்ள விவசாய வீதி கள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் கடந்த ஆண்டில் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறு புனரமைப்பு பணி கள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் குறித்த பிரதேசத்தில் ஏற்பட்ட சீரற்ற கால நிலை மற்றும் தொடர் மழை காரணமாக புனரமைப்பு பணிகளில் தாமதங்கள் ஏற்பட்டன.

இந்த நிலையில் குறித்த விதிகளை புனரமைக்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு மேற்படி குளத்தின் கீழுள்ள ஒன்பது கிலோ மீற்றர் வரையான விவசாய வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 120 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 280 | 350 |
| தக்காளி | 80 | 50 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 130 | 120 | 80 |
| கோவா | 80 | 60 | 100 | 100 |
| கரட் | 140 | 200 | 180 | 250 |
| பூசணி | 50 | 80 | 70 | 100 |
| புடோல் | 150 | 100 | 150 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 120 | 100-250 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140-160 | 160 |
| பாகற்காய் | 300 | 300 | 280 | 300 |
| வெண்டிக்காய் | 180 | 140 | 150 | 240 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 100 | 140 |
| பயற்றங்காய் | 180 | 150 | 180 | 160 |
| லீக்ஸ் | 140 | 100 | 140 | 160 |
| பீற்றூட் | 120 | 120 | 150 | 160 |
| கறிமிளகாய் | 180 | 200 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 1400 | 1300 | 1200 | 1400 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 160 | 140 | - | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 100 | 80 |
| தேசிக்காய் | 100 | 100 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 140 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 120 | 300 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | - | - | - | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 21.03.2022-07.10.2023

# ஆறில் ராகு வருகிறது; அனைத்திலும் யோகம் தருகிறது

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**(விசாகம் 4 ஆம் பாதம், அனுசம், கேட்டை வரை)**

**பெயரின் முதல் எழுத்துக்கள்: தோ, ந, நி, நே, நோ, ய, யி, யு உள்ளவர்களுக்கும்**

**விருச்சிக இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், மார்ச் 21 ஆம் திகதி 6 ஆம் இடத்திற்கு வரப்போகிறார்.

6 இல் ராகு இருந்து குரு கேந்திரத்தில் இருப்பதால் 'அஷ்டலட்சுமி யோகம்' உருவாகிறது. அதேசமயம் கேது 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே தொழில் முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் அதே இடத்தில் சஞ்சரித்து அங்குள்ள நட்சத்திரப் பாதசாரங்களுக்கேற்ப பலன்களை வழங்குவார்கள்.

**அதிர்ஷ்டம் தரும் ராகு, சுபவிரயம் தரும் கேது**

உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கப் போகிறார். தொழிலில் தனலாபம் கிடைத்து நினைத்த தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு போன்றவை வந்து சேரும். வாகனம் வாங்கும் யோகமும் உண்டு. கொடுக்கல்- வாங்கலை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக எடுத்த முயற்சியில் ஆதாயம் உண்டு. வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி காணும் நேரம் இது.

**சூரியன் சாரத்தில் ராகு சஞ்சாரம் (21.3.2022 முதல் 22.5.2022 வரை)**

கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு அனைத்துக் காரியங்களிலும் வெற்றி காண்பீர்கள். பணவரவு தாராளமாக இருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். புதிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொறுப்புகளும், பதவிகளும் வந்துசேரும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். இக்காலம் உங்களுக்கு யோகமான காலம்தான்.

**சுக்கிரன் சாரத்தில் ராகு சஞ்சாரம் (23.5.2022 முதல் 28.1.2023 வரை)**

பரணி நட்சத்திரக் காலில் சுக்கிரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, பயணங்களால் பலன் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். இல்லத்தில் கெட்டிமேளம் கொட்டும் வாய்ப்பும், கட்டடப் பணி செய்யும் வாய்ப்பும் இருக்கிறது. பாதியில் நின்ற திருமணப் பேச்சு கூட இப்போது தொடரலாம். பெரிய மூலதனங்கள் கிடைத்து தொழிலை விரிவாக்கம் செய்ய முன்வருவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. பழைய நகைகளைக் கொடுத்துவிட்டுப் புதிய நகைகளை வாங்கும் முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்கும். அதன் மூலம் மேலதிகாரிகளின் மனதில் இடம்பிடித்து வேண்டிய சலுகைகளைப் பெறுவீர்கள்.

**கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சாரம் (29.1.2023 முதல் 7.10.2023 வரை)**

அச்சுவினி நட்சத்திரக் காலில் கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் கூடுதலாக இருக்கும். ஆரோக்கியத்தில் கொஞ்சம் கவனம் எடுத்துக்கொள்ளுங்கள். வீடு மாற்றங்கள், உத்தியோக மாற்றங்களைப் பற்றி சிந்திப்பீர்கள். வியாபாரத்தில் கூட்டாளிகளால் பிரச்சினை வரலாம். திடீர் பயணங்களும், அதனால் சில மனக் குழப்பங்களும் ஏற்படலாம். நல்ல நண்பர்களின் ஆலோசனைகள் தக்க சமயத்தில் கைகொடுக்கும். நீண்ட நாட்களாக நடைபெறாத ஒரு சில காரியங்கள் இப்போது நடைபெறலாம். புதிய பங்குதாரர்கள் தொழில் கூட்டாளியாக மாறி பொருளாதாரத்தை அதிகரிக்க வைப்பர். பிள்ளைகளின் கல்வி சிறப்பாக எடுத்த முயற்சி வெற்றியாகும்.

**குரு சாரத்தில் கேது சஞ்சாரம் (21.3.2022 முதல் 25.9.2022 வரை)**

விசாக நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பணப்புழக்கம் நன்றாக இருக்கும். நண்பர்கள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வர். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். தொழிலில் தனித்து இயங்க வேண்டுமென்ற ஆர்வம் அதிகரிக்கும். புதிய நண்பர்கள் அறிமுகம் ஆவர். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். தாய்வழி உறவினர்களின் ஆதரவு உண்டு. படித்து முடித்த பிள்ளைகளுக்கு எதிர்பார்த்த வேலை கிடைக்கும். பெண் பிள்ளைகளின் கல்யாணத்தை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




**ராகு சாரத்தில் கேது சஞ்சாரம் (26.9.2022 முதல் 3.6.2023 வரை)**

சுவாதி நட்சத்திரக் காலில் ராகுவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில், உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் உண்டு. பூர்வீக சொத்துக்களைக் கொண்டு அதில் புதிய கட்டடங்கள் கட்டும் வாய்ப்பைப் பெறுவீர்கள். அண்ணன், தம்பிகளின் அரவணைப்பாலும், அருகில் இருப்பவர்களின் ஆதரவாலும் எண்ணிய காரியங்களை எளிதில் முடிப்பீர்கள். ஆதாயம் தரும் தகவல்கள் அதிகம் வரலாம். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர்.

**செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சாரம் (4.6.2023 முதல் 7.10.2023 வரை)**

சித்திரை நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். ஆரோக்கியம் சீராகும். ஆதரவுக்கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை உயரும். உத்தியோகத்தில் பணி நிரந்தரம் கிடைக்கலாம். நல்ல மனிதர்களின் நட்பைப் பெறுவீர்கள். தொழிலில் வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். கொடுக்க வேண்டிய பாக்கிகளை கொடுத்து மகிழ்வீர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறி உங்கள் கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்பு தருவர். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

இந்த ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில், குரு பகவான் இரண்டு முறை பெயர்ச்சியாகிறார். அதன்படி வருகிற ஏப்ரல் 13 ஆம் திகதி மீன இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அவரது பார்வை உங்கள் இராசியிலும், 9, 11 ஆகிய இடங்களிலும் பதிகிறது. இது ஒரு அற்புதமான நேரம் ஆகும். தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். துணிந்து நீங்கள் எடுத்த முடிவுகள் உங்களை உச்சத்திற்கு கொண்டு செல்லும். வருமானம் பல வழிகளிலும் வந்துசேரும். அடுத்ததாக 22.4.2023 அன்று மேஷ இராசிக்கு குரு பகவான் பெயர்ச்சியாகிறார். இதனால் குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

16.3.2023 அன்று கும்ப இராசிக்குச் சனி பகவான் பெயர்ச்சியாகிறார். அது உங்கள் இராசிக்கு 4 ஆம் இடம் ஆகும். சனி பார்க்கும் இடத்தைக் காட்டிலும், இருக்கும் இடத்திற்கு பலன் அதிகம். அதன்படி சனி பகவான், தன்னுடைய சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால் வீடு கட்டும் வாய்ப்பு அல்லது கட்டிய வீட்டை பழுது பார்க்கும் சூழ்நிலை உருவாகும். வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் செலவு கூடும். தொழிலில் கூடுதல் கவனம் செலுத்துவதன் மூலம் இலாபம் பெறலாம்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த ராகு - கேது பெயர்ச்சி, உங்களுக்கு நன்மை தரும் பெயர்ச்சியாகவே அமையப் போகிறது. உடல்நலம் சீராகும். உங்கள் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தாய்வழி ஆதரவு உண்டு. பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு மிதமிஞ்சிய பொருளாதாரம் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயர்வு மட்டுமல்லாமல் ஊதிய உயர்வும் உண்டு. நாக கவசம் பாடி ராகு - கேதுக்களை வழிபடுவதன் மூலம் நன்மைகளை அதிகம் பெறலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### வீண் ஆசை ஏன்?



(நேற்றைய தொடர்ச்சி)

அதற்காகத் தான் இதை வெட்ட நினைத்தேன் என்றாள்.

யட்சிணியும் சிரித்தவாறே "பூ! இவ்வளவு தானா? நான் உனக்கு ஒரு அபூர்வ வீணை கொடுக்கிறேன். அதைக் கொண்டு போய் அரச குமாரியிடம் கொடு" என்று சொல்லித் தன் கையை நீட்டினாள். மறு விநாடியே அவளது கையில் ஒரு அழகிய வீணை இருந்தது.

அதுகண்டு ராமப்பா ஆச்சரியப்பட்டு நின்றான். அப்போது யட்சிணி "இது சாதாரண வீணை அல்ல. அபூர்வ வீணை. வீணை வாசிக்கத் தெரியாதவர்கள் கூட இதில் வாசிக்கலாம். இதன் முன் அமர்ந்து சரஸ்வதி தேவியை நினைத்துக் கொண்டு தனக்குத் தெரிந்த பாட்டை எண்ணி இதன் கம்பிகளைத் தொட்டால் போதும். உடனே அதை இந்த வீணை இசைக்கும்" என்றாள்.

ராமப்பாவும் திகைத்துப் போய் "ஓகோ! அப்படியா!" என ஆச்சரியத்துடன் கூறவே யட்சிணியும் "எல்லா ராகங்களையும் இதில் கேட்டு இன்புறலாம். மோகன ராகத்தையும் அமிர்தவர்ஷிணி ராகத்தையும் மட்டும் வாசிப்பதற்கு முன் நன்கு யோசித்துக் கொள்ள வேண்டும். முதலாவது கூறிய ராகத்தை நினைத்து இதைத் தொட்டால் அவன் மனம் விரும்பும் பெண்ணை மணந்து கொள்வான், மற்ற ராகத்தை நினைத்து இதைத் தொட்டால் ஒரே மழையாகப் பெய்யும். இன்னொரு விஷயம். இந்த மரமும் நானும் இங்கே இருக்கும் வரைதான் இந்த வீணைக்கு இந்த அரிய சக்தி இருக்கும். இதை நினைவில் வைத்துக்கொள்" என்று கூறி அந்த வீணையை ராமப்பா விடம் கொடுத்தாள். ராமப்பா அதை வாங்கிக் கொண்டதும் யட்சிணி மாயமாய் மறைந்து போனாள். திடீரென அரிய சக்தி வாய்ந்த ஒரு வீணை தனக்குக் கிடைத்ததால் ராமப்பா ஒரேயடியாக மகிழ்ந்து போனான். அவன் மனம் அந்த வீணையைக் கொண்டு இளவரசி சந்திரிகாவை மணந்து கொண்டு விட வேண்டும் என்று எண்ணியது. ராமப்பாவும் தன்னோடு வந்தவனிடம் "வா போக லாம். ஆனால் இங்கு நடந்ததை நீ வேறு யாரிடமும் சொல்லக் கூடாது. தெரிந்ததா" என்றான். அந்த ஆளும் யாரிடமும் சொல்வதில்லை என்று கூறினான்.

ஆனால் ஊருக்குப் போனதும் அவன் தன் மனைவியிடம் காட்டில் ராமப்பா வுக்குக் கிடைத்த அதி சய வீணை பற்றக் கூறினான் அவள் உடனேயே அந்த விஷயத்தை ஊர் முழுவதும் பரப்பி விட்டாள். மறுநாள் காலை ராமப்பா தூங்கி எழுந்து தன் வீட்டு வாசலுக்கு வந்தபோது அங்கு ஊரார்கூடி நிற்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். (தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்





மறுநாள் பொழுது விடிந்தது; இராமன் காலைக் கடனை முடித்தான்; வேதியர் சிலர் அவனைத் தொடர்ந்து வந்தனர்; குகனைப் பார்த்து இராமன், "படகினைக் கொணர்க; கங்கையைக் கடந்து அக்கரைபோக வேண்டும்" என்றான்.

இராமன் மீது அக்கறை காட்டினான். "வனத்து வாழ்வை ஏற்றுத்தான் ஆக வேண்டுமா? இங்கே எங்களோடு கங்கைக் கரையிலேயே நங்கை சீதையோடு தங்கிவிடலாமே?".

"காலமெல்லாம் இங்கே தங்கி வாழ்ந்து முடிக்கலாம்; இங்கே உங்களுக்கு என்ன குறை? நாங்கள் காட்டு மனிதர் தான்; எனினும், உம் பகைவர்க்கு உங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டோம்; உண்ண உணவு, உடுக்க உடை, தங்க உறையுள் இவற்றை அமைத்துத் தருகிறோம்.

"தேனும் தினையும், ஊனும் மீனும் உள்ளன; திரிந்து விளையாட விரிந்த காடுகள் உள்ளன. நீந்தி விளையாட நீர் நிறைந்த கங்கை நதி இருக்கிறது. உறுதுணையாகத் தறுகண்மை மிக்க எம் வீரர் உளர்; ஏவலுக்கும் காவலுக்கும் கணக்கற்ற வீரர்கள் இங்கே காத்துக்கிடக்கின்றார்கள்" என்று அன்பு காட்டி வேண்டினான். "வீரனே! இங்கு வந்தது சுற்றுலாப் பயணம் செய்ய அன்று; உண்டு உறங்கிக் களித்து விளையாட அன்று; புண்ணிய நதிகள் ஆடவும், ஞான நன்னெறி நண்ணவுமே யாகும்; இதுவே என் அன்னையின் அன்புக் கட்டளை; இது எமக்கு ஏற்பட்ட கால் தளை, பதினான்கு ஆண்டுகள் விரை வில் கழிந்து விடும். திரும்பும் போது விரும்பி உங்களைச் சந்திப்போம்; உம் விருந்து ஏற்போம்" என்று கூறினான்.

"யாம் உடன் பிறந்தவர் நால்வர்; உன்னோடும் சேர்ந்து ஐவர் ஆகிவிட்டோம்" என்று ஆறுதல் கூறினான்.

குகன் அதற்கு மேல் அதிகம் பேச, அவன் அடக்கம் இடம் அளிக்கவில்லை. அவன் கடமை செய்வதில் நாட்டம் கொண்டான். ஓடம் ஒன்று வந்து நின்றது. அதில் மூவரும் ஏறிக் கங்கையைக் கடந்து அடுத்த கரை சேர்ந்தனர்.

### வனம்புகு வரலாறு

இளவேனிற் காலம் அந்தக் காட்டுக்குப் பொலிவை ஊட்டியது; இராமன் வரவும் முகில்கள் பூமழை பொழிந்தன; வெய்யில் இளநிலவைப் போலத் தண் கதிர்களை வீசியது; மரங்கள் தழைத்து நறுநிழல் தந்தன. பனித்துளிகள் சிதறின. இளந்தென்றல் மலர்களில் படிந்து மணம் அள்ளி வீசியது; மயிலினம் நடமாடின; இத்தகைய காட்டு வழியில் இராமன் இனிதாய் நடந்து சென்றான்.

மூவரும் சித்திர கூடம் நோக்கிச் சென்று கொண்டு இருந்தனர். வழியில் பரத்துவாசர் ஆசிரமம் காணப் பட்டது. முனிவர் அவர்களைச் சந்தித்தார்; ராமன் துன்பக் கதையைக் கேட்டு. அன்பு மொழி பேசி ஆதரவு காட்டினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாத மரத்தை வேலைக்கு அதிகமாக உபயோகிக்கக் கூடாது. அது போலத்தான் பண்படாத அறிவும்.
– ஹோரம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வில(க்)குவதாக இருந்தாலும் அதை விரைவாகச் செய்க!

தலைக்கு மேல் வெள்ளம் சாண் ஏறினால் என்ன? முழம் ஏறினால் என்ன? என்றொரு தொடர் நம் தமிழ் மொழியில் உண்டு.

அந்தத் தொடர்மொழி இலங்கைக்கும் பொருந்தப் போகின்றது.

ஆம், இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குச் சென்றுவிட்டது.

இனி எதுவும் செய்ய முடியாது என்ற கையறுநிலையில் அரசாங்கத்தின் அத்தனை திட்டமிடல்களும் தோல்விக்கு மேல் தோல்வியைச் சந்தித்துள்ளன.

நிலைமை இதுவாக இருக்கையில் என்றுமில்லாதவாறு எழுகை பெற்றுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழிவகை என்ன? என்று கேட்டால், அதற்கான முதலாவது பதில் அரசாங்கம் பதவியில் இருந்து விலகுவது அல்லது விலக்குவது என்பதாக இருக்கும்.

எனினும் அரசாங்கம் தானாக விலகும் போல் தெரியவில்லை.

மாறாக, அரசாங்கத்தைக் கவிழ்ப்பதாக இருந்தால் அதற்கான ஆயத்தங்கள் இன்னமும் நடக்கவில்லை என்றே கூறவேண்டும்.

ஆக, பொருளாதார நெருக்கடி நிலைமையினின்றும் நாட்டை ஓரளவேனும் மீட்டெடுப்பதாக இருந்தால், அதற்கான ஒரே வழி வெளிநாடுகளிடம் இருந்து உதவிகளைப் பெறுவதாக இருக்கும்.

ஆனால் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது அரசாங்கமும் இருக்கும் வரை வெளிநாடுகளிடம் இருந்து எந்த உதவியும் கிடைக்கமாட்டா என்பது நிறுதிட்டமான உண்மை.

ஆம், இலங்கையின் இன்றைய நிலைமைக்கு ஆளுந்தரப்பின் மீதான வெளிநாடுகளின் வெறுப்பும் காரணம் என்பதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

அதாவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நடைமுறையும் செயற்பாடும் வெளிநாடுகளுக்கு அவர் மீது வெறுப்பை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

அதிலும் குறிப்பாக சீனாவை முதன்மைப் படுத்துவதையும் இலங்கையில் சீனாவுக்கு இடம் வழங்கப்பட்டதையும் வல்லாதிக்கம் பொருந்திய நாடுகள் விரும்பவில்லை.

ஆக, உலக நாடுகளின் தயவில் காலத்தை ஓட்டிக்கொண்டிருந்த இலங்கை; தன்னிலை மறந்து சீனாவை வைத்துக்கொண்டு அண்டை நாட்டுக்கும் அமெரிக்கா போன்ற வல்லரசுகளுக்கும் தன்னை உயர்த்திக் காட்ட நினைத்தது.

இந்த நினைப்புத்தான் இலங்கையின் பிழைப்பைக் கெடுத்துவிட்டது எனலாம்.

ஆம், பறட்டைக் காட்டுக்கு கறட்டி ஓணான் பஞ்சவர்ணக்கிளி என்றொரு தத்துவம் நம்மிடம் உண்டு.

அதாவது பறட்டைக் காட்டுக்கு கறட்டி ஓணான்கள் பெரிதாக இருக்கலாம். அதற்காக கறட்டி ஓணான்கள் தங்களை பஞ்சவர்ணக்கிளிகளாகப் பாவனை செய்து அடர்ந்த பெரும் காட்டுக்கும் தாங்களே உயர்ந்த பஞ்சவர்ணக்கிளிகள் என்று நினைத்தால், அதற்கான பதிலடியை பஞ்சவர்ணக்கிளிகள் கொடுத்தே ஆகும். அதுவே இலங்கைக்கு நடந்தது.

இதனை நினைத்தேனும் இலங்கை அரசாங்கம் விலகவேண்டும் அல்லது அதனை விலக்க வேண்டும்.

இதனையும் விரைவாகச் செய்யாவிட்டால் அதுவும் பயனற்றதாகப் போகும்.

# சமஷ்டி அரசியல் யாப்பை உருவாக்க இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும்

## ஜெய்சங்கருக்கு முன்னணி கடிதம்

(யாழ்ப்பாணம்)

ஒற்றையாட்சி அரசியல் யாப்பு நிறைவேற்றப்படுவதனை தடுத்து தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி அரசியல் யாப்பை உருவாக்க இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் ஊடாக அக்கடிதம் அனுப்பப்பட்டது.

ஒற்றையாட்சி அரசியல் யாப்பு நிறைவேற்றப்படுவதனை தடுத்து தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி அரசியல் யாப்பை உருவாக்க இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகாரச் செயலர் ஊடாக, இந்திய அரசிடம் கோரிக்கை விடுக்கும் கடிதமும் கிட்டுப்பூங்கா பிரகடனமும் யாழில் உள்ள இந்திய துணைத்தூதரகத்தில் கையளிக்கப்பட்டது. (ம)

## வவுனியாவில் பாடசாலையில் ஆசிரியர் மீது தாக்குதல்

### பொலிஸாரால் மூவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் பாடசாலையில் புகுந்து ஆசிரியரை தாக்கியமை தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா செட்டிகுளம் வீரபுரம் மாணிக்கவாசகர் வித்தியாலயத்திற்குள் சென்ற மூவர் ஆசிரியர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய நிலையில் ஆசிரியர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஆசிரியரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-250)

## $7\frac{1}{2}$ மணித்தியாலங்களுக்கு மேல் இன்று மின்வெட்டு

(கொழும்பு)

நாடு முழுவதும் சுழற்சி முறையில் இன்று செவ்வாய்க்கிழமை ஏழரை மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல் படுத்தப்படவுள்ளது.

A முதல் L வரையான பகுதிகளில் காலை 8 மணிமுதல் மாலை 6 மணி வரையான காலப் பகுதிக்குள் 5 மணி நேரமும் மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரையான காலத்தில் 2 மணி 30 நிமிடங்களும் மின்வெட்டு அமுலாகும்.

P முதல் W வரையான பகுதிகளில் காலை 8.30 மணிமுதல் மாலை 6.30 மணி வரை 5 மணி நேரம் மற்றும் மாலை 6.30 மணிமுதல் இரவு 11 மணி வரை 2 மணி 15 நிமிடங்கள் மின்வெட்டு அமுல் செய்யப்படும்.

இலங்கை மின்சார சபை விடுத்த வேண்டுகோளை ஏற்று மின்வெட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை- காத்தான் கோட்டம், மறக்கறம் பளை- கணேசபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## நாவற்குழி பகுதியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கஞ்சாவினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நாவற்குழிப் பகுதியில் வைத்து நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவு மற்றும் சாவகச்சேரி பொலிஸார் இணைந்து குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கைதான நபரிடம் இருந்து சிறிதளவான கேரள கஞ்சா மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-30)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## எல்லையற்ற இன்பம்

❖ இந்தப் பிரபஞ்சத்தில் நாம் காணும் அனைத்தின் அடிப்படையும் சுதந்திரத்திற்கான ஒரு போராட்டமே. இந்த இயல்பின் உந்து வேகத்தால்தான் மகான் பிரார்த்திக்கிறார்.

❖ செயலின் பாதை சரியான திசையில் இல்லை என்றால், அதை நாம் தீமை என்கிறோம். இதே உந்துவேகம் சரியான உயர்ந்த வழியில் வெளிப்படுமானால் அதை நன்மை என்று கூறுகிறோம். ஆனால் இரண்டிலும் உந்துவேகம் ஒன்றுதான். சுதந்திரத்திற்கான போராட்டம்தான்.

❖ தான் கட்டுண்ட நிலையில் இருப்பதை அறிந்து மகான் வேதனை கொள்கிறார். அதிலிருந்து விடுபட விரும்புகிறார். அதற்காக இறைவனை வணங்குகிறார்.

❖ குறிப்பிட்ட சில பொருட்கள் தன்னிடம் இல்லையென்பதால் வேதனை கொள்கிறான். திருடன், அந்தத் தேவையைப் பூர்த்தி செய்து அதிலிருந்து விடுபட விரும்புகிறான். அதனால் திருடுகிறான். எனவே உணர்வுள்ளதாகட்டும், உணர்வற்றதாகட்டும், இயற்கை அனைத்திற்கும் ஒரே இலட்சியம் சுதந்திரம்தான். அறிந்தோ,அறியாமலோ ஒவ்வொன்றும் அந்தச் சுதந்திரத்திற்காகவே போராடிக் கொண்டிருக்கின்றன.

❖ ஆனால், ஒரு மகான் தேடுகின்ற சுதந்திரம், திருடன் தேடுகின்ற சுதந்திரத்திலிருந்து முற்றிலும்வேறுபட்டது. மகான் தேடுகின்ற சுதந்திரம் அவனை எல்லையற்ற இன்பத்திற்கு, விபரிக்க முடியாத ஆனந்தத்திற்கு அழைத்துச் செல்கிறது. திருடன் தேடுகின்ற ஒன்றோ அவனது ஆன்மாவை மேன்மேலும் பல்வேறு சங்கிலிகளால் கட்டிச் சிறையிலிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை


கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 30

அவை பலபிட்டிய(79), கரந்தெனிய(60), எல்பிட்டிய(79), ஹினிதும(108), யக்கலமுல்ல (100), பத்தேகம(90), அம்பலாங்கொடை(67), ஹிக்கடுவை(96), காலி(51), அக்மீமன(76), ஹபராதுவ(89) என்பனவாகும். அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விபரம் அட்டவணை (h2) இல் காட்டப்பட்டுள்ளது.

**மாத்தறை மாவட்டம் வடக்கு திசையில் இரத்தினபுரி மாவட்டத்தையும் கிழக்கு திசையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தையும் மேற்குத் திசையில் காலி மாவட்டத்தையும் தெற்குத் திசையில் கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஒரு சதுர கிலோ மீற்றருக்கு சனத்தொகை அடர்த்தி 641 ஆகும்.**

**அட்டவணை (h2) -காலி மாவட்டதேர்தல் தொகுதிகளும் சனத்தொகையும்**

| தேர்தல் தோகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லிம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| காலி | 68388 | 1099 | 34701 | 151 | 104339 |
| ஹிக்கடுவை | 101029 | 396 | 50 | 67 | 101542 |
| பத்தேகம | 92470 | 2590 | 280 | 27 | 95367 |
| பலபிட்டிய | 89256 | 199 | 2233 | 105 | 91793 |
| கரந்தெனிய | 89730 | 1513 | 568 | 34 | 91845 |
| எல்பிட்டிய | 91161 | 1986 | 3 | 21 | 93171 |
| அம்பலாங்கொடை | 94862 | 213 | 16 | 54 | 95145 |
| அக்மீமன | 93456 | 907 | 865 | 64 | 95292 |
| ஹபராதுவ | 96364 | 119 | 36 | 114 | 96633 |
| யக்கலமுல்ல | 93968 | 4168 | 16 | 75 | 98227 |
| ஹினிதும | 93038 | 6909 | 22 | 11 | 99980 |
| மொத்தம் | 1003722 | 20099 | 38790 | 723 | 1063334 |




### மாத்தறை மாவட்டம் பற்றிய தகவல்கள்

1,283 சதுர கிலோ மீற்றர் பரப்பில் மாத்தறை மாவட்டம் அமைந்துள்ளது. தென் மாகாணத்தின் மொத்தப் பரப்பில் 23.1% இந்த மாவட்டத்துக் குரியது. 1270 சதுர கிலோ மீற்றர் நிலப் பிரதேசத்தையும் 13 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர் பரப்பையும் கொண்டுள்ளது.

வடக்கு திசையில் இரத்தினபுரி மாவட்டத்தையும் கிழக்கு திசையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தையும் மேற்குத் திசையில் காலி மாவட்டத்தையும் தெற்குத் திசையில் கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) படி மாவட்டத்தின் சனத்தொகை 814,048 ஆகும். ஒரு சதுர கிலோ மீற்றருக்கு சனத்தொகை அடர்த்தி 641 ஆகும்.

### மாத்தறை மாவட்டம் இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு -2012

இனங்கள் மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு அட்டவணை (J1) இல் காட்டப்பட்டுள்ளது. அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய, மாவட்டத்தின் பெரும்பான்மை மக்கள் சிங்களவர்கள் (94.5%) ஆவர். பௌத்தர்கள் 94.1% ஆகும். இந்த பெரும்பான்மைக்குப் பிறகு இரண்டாவதாக 3.1% முஸ்லிம்கள் உள்ளனர்.

இஸ்லாமியர்கள் 3.2% ஆகும். தமிழர்களின் சதவீதம் (இலங்கை மற்றும் இந்திய தமிழர்கள்) மற்றும் இந்து பக்தர்களின் சதவீதம் 3% ஐ விட குறைவாகும்.

**மாத்தறைமாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச்சமூகங்கள்-2012**

| பிரதேசச்செயலகம் | தமிழர் | முஸ்லீம் |
|---|---|---|
| பிட்டபெத்தர | 3718 | 35 |
| கொட்டபொல | 11954 | 110 |
| பஸ்கொட | 1685 | 1 |
| முலடியன | 259 | 2 |
| அத்துரெளிய | 757 | 1726 |
| அக்குரெஸ்ஸ | 1370 | 10 |
| வெலிபிட்டிய | 123 | 6314 |
| மாலிம்பட | 80 | 480 |
| கம்புறுபிட்டிய | 53 | 10 |
| ஹக்மன | 135 | 854 |
| கிரிந்த புஹுால்வெல்ல | 5 | 665 |
| திஹகொட | 22 | 6 |
| வெலிகம | 213 | 7357 |
| மாத்தறையும் சூழலும் | 326 | 4296 |
| தெவிநுவர | 90 | 657 |
| திக்வெல்ல | 109 | 2731 |
| மொத்தம் | 20899 | 25254 |

**அட்டவணை(J1): இன அடிப்படையில் மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு**

**மாத்தறை மாவட்டம்**

| இனம் | எண்ணிக்கை | % | சமயம் | சனத்தொகை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 767,580 | 94.3 | பௌத்தம் | 766,323 | 94.1 |
| இலங்கைத் தமிழர் | 8,772 | 1.1 | இந்து | 16,421 | 2.0 |
| இந்தியத் தமிழர் | 12,127 | 1.5 | இஸ்லாம் | 25,614 | 3.2 |
| இலங்கை முஸ்லிம் | 25,254 | 3.1 | உரோமன் கத்தோலிக்கம் | 2,432 | 0.3 |
| வேறு | 315 | - | வேறு கிருஸ்தவம் | 3,208 | 0.4 |
| | | | வேறு | 50 | - |
| மொத்தம் | 814,048 | 100 | மொத்தம் | 814,048 | 100 |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

அயலவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இலங்கைக்கான இந்தியாவின் உதவிகள் தொடரும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறும் 'பிம்ஸ்டெக்' மாநாட்டில் பங்கேற்பதற்காகக் கொழும்பு வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்று முற்பகல் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கையின் பொருளாதார நிலைமை மற்றும் இந்தியாவின் ஆதரவு தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று தனது டுவிட்டர் பக்கத்தில் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

அயலவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இலங்கைக்கான உதவி தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## இணையவழி...

டது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரால் நண்பகல் ஒரு மணியளவில் காணொளி முறையில் திறந்து வைக்கப்பட்டது.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வியமைச்சர் தினேஸ் குணவர்த்தன, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணப் பண்பாட்டு மையத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அரசாங்க அதிபர்கள், மத குருமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணப் பண்பாட்டு மையம் வெகு விமரிசையாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியினால்திறந்து வைக்கப்பட்ட பின்னரே பொதுமக்கள் பாவனைக்காக கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-33)


தன நிதானய
திகதி - 2022.03.28
சீட்டிழுப்பு இலக்கம் - 750
O 04 22 34 73
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9486

மஹஜன சம்பத
திகதி 2022/03/28
சீட்டிழுப்பு இலக்கம் 4720
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
G 1 9 3 6 7 0
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1068
வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள்
M 04 03 49 56 64


## புதுப்பிக்கத்தக்க...

நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க தூதுவர் திருமதி ஜூலி சங் தெரிவித்தார்.

ஜூலி சங்கிற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் திருமதி விக்டோரியா நூலண்ட் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்பை தூதுவர் பாராட்டினார்.

அண்மைக்காலமாக இலங்கைப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களை விளக்கிய ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்தை அணுகும் விடயத்தில் அமெரிக்காவின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை பாராட்டிய திருமதி ஜூலி சங், இது நீண்ட கால அடிப்படையில் இந்நாட்டுக்கு முக்கியமானதொன்றாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

எந்தவித பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார். (ம)

## இந்திய வெளி...

அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் நேற்று முற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

கொழும்பில் நேற்று ஆரம்பமான ஐந்தாவது பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜெய்சங்கர் இலங்கை வந்துள்ளார்.

ஜெய்சங்கரின் வருகை தொடர்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்த ஜனாதிபதி, உணவு மற்றும் மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்கியதற்கு நன்றி தெரிவித்தார்.

இந்த ஆண்டு, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நினைவு நாணயம் மற்றும் நினைவு முத்திரை வெளியீடு உட்பட பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.(ம)

## ரூ.5 ஆயிரம்...

மாதாந்தம் 5,000 ரூபாய் வீதம் ஏப்ரல் மற்றும் மே ஆகிய இரு மாதங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அடையாளம் காணப்பட்ட, குறைந்த வருமானங்களை பெறும் 31 இலட்சம் குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவானது வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)

## அரசியலமைப்...

ஜனாதிபதியுடனான சந்திப்பு எவ்வாறு அமைந்தது என ஜெய்சங்கர் வினவினார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பு பற்றி இரா.சம்பந்தன் விளக்கமளித்தார். 13ஆவது திருத்தத்தைக்கூட முழுமையாக அமுல்படுத்த அவர்கள் தயங்குகிறார்கள் என இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியுடனான பேச்சு விவகாரங்களை விபரிக்குமாறு எம்.ஏ.சுமந்திரனை, சம்பந்தன் கேட்டுக் கொண்டார். 5 விடயங்களின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடைபெற்றதாக எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்து, அந்த விடயங்களை விபரித்தார்.

இதற்குக் கருத்துத் தெரிவித்த எஸ்.ஜெய்சங்கர், 'ஜனாதிபதி கோட்டாபயவுடனான சந்திப்பிலும், கூட்டமைப்புடனான பேச்சு பற்றி வினவினேன்.

நீங்கள் இப்பொழுது சொன்ன அதே தகவல்களையே அவரும் சொன்னார். என்னுடைய அனுபவத்தின்படி, இப்படியான தருணமொன்றில் (பேச்சுவார்த்தை முயற்சி சமயம்) அரசும், நீங்களும் (தமிழர் தரப்பு) ஒரே விதமாக சொன்ன முதலாவது சந்தர்ப்பம் இதுதான்" எனத் தெரிவித்தார்.

'புதிய அரசியலமைப்பு உருவாக்கும் முயற்சியில் இணைந்து விடாதீர்கள். அதில் இணைந்தால், அந்த செயன்முறை நடப்பதாக அரசு கூறிக்கொண்டிருக்கும்.

இறுதியில் உங்களை ஏமாற்றி விடுவார்கள். இந்தியா உள்ளிட்ட தரப்புக்கள் இலங்கையுடன்" பேசினால், அரசியலமைப்பு உருவாக்கத்தில் எம்முடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகிறது எனக் கூறுவார்கள்.

எம்மால் எதையும் செய்ய முடியாது. அரசியலமைப்பிற்காக காத்திருக்காமல், ஏனைய விவகாரங்களை தீர்த்துக் கொள்ளுங்கள்' என ஆலோசனை வழங்கினார் எனத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

## விலை...

தானிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ், சிங்கள புத்தாண்டின் பின்னர் விலை அதிகரிப்பு ஏற்படும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ம)

## 13ஐ...

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சரை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொழும்பு இந்திய இல்லத்தில் நேற்று சந்தித்தது.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற சந்திப்பு குறித்தும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தெளிவுபடுத்தியதாக தெரிவித்தார்.

அத்துடன், உடனடியாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதியினால் உறுதியளிக்கப்பட்ட 4 முக்கிய விடயங்களை [illegible] அமைச்சர் ஜெய்சங்கரிடம் கூறியதாகவும் சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

மேலும் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்போம் என ஜெய்சங்கர் கூட்டமைப்பிடம் உறுதியளித்தார். (ம)

# கிளிநொச்சியில் பேருந்து விபத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - முரசுமோட்டை ஏ35 வீதியில் பேருந்து ஒன்று பாலத்துடன் மோதியதில் இரண்டு பேர் படுகாயமடைந்த நிலையில் ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையிலும் மற்றொருவர் தருமபுரம் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவமானது நேற்று இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தருமபுரத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி சென்ற அரசுப்பேருந்து முரசுமோட்டை பகுதியில் செல்லும்பொது அங்குள்ள பாலத்துடன் மோதியதில் குறித்த பேருந்தானது விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1697 | நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 28.03.2022 | தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
F 03 34 43 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூபா 55,055,944/-
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.03.28
சீட்டிழுப்பு இல: 3858
வர்ணம்: நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.5,824,820/-
வெற்றி இலக்கங்கள் 10 25 41 70
ஆங்கில எழுத்து P
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,436,354/-
திகதி 28.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3409
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 03 04 12 44
கடகம்
1878977
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 14,921,534/-

12
சீட்டிழுப்பு வாரம் 873
வர்ணம் இள நீலம்
திகதி 2022.03.28 திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 04 17 18 42 55
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 226,744,159/-
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1823
சீட்டிழுப்பு திகதி 28.03.2022
வெற்றி இலக்கங்கள் 25 33 48 50
ஆங்கில எழுத்து Y
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 32,979,128/-
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1523
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.03.28
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,270,840/-
வெற்றி இலக்கங்கள் 13 28 45 48
ஆங்கில எழுத்து M
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10769)

**076 825 7716** (ஆகாஸ்)



## பெண் உதவியாளர் தேவை

**Cargills Square**வில் (No:11, 1st Floor, Jaffna) அமைந்துள்ள Secrets விற்பனை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

தகைமை :- A/L or O/L, ஆங்கில அறிவு, வேலை முன்னனுபவம் விரும்பத்தக்கது.

வேலை நேரம் : - 10.00 am to 7.30 pm (Monday-Saturday)

தொடர்புகளுக்கு:- (10816)

**Priya.G - 077 951 0436, 021 221 6488**



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4072)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்




COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

**0777-068-777**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 100 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- ◆ சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- ◆ A32 பிரதான வீதியில் இருந்து 50 m நடைதூரம்.
- ◆ A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- ◆ 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ◆ நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் 380 தென்னைகள் உள்ளன.

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம் - காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை ரூ.450,000 (10820)

**ஜெயம் - 077 814 7389, 077 241 7589**


# கோவிட்; 6 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 6 பேர் கோவிட் தொற்றால் மரணித்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16, 465 ஆக அதிகரித்துள்ளது. (ம)


## தொழில் வாய்ப்பு

தனியார் நிறுவனத்தில்
பதவி வெற்றிடங்கள்

தகைமை:
A/L கல்வி கற்றிருத்தல்
(ஆண்/பெண் இருபாலாரும்)
வயதெல்லை 23க்கு மேல்
ஓய்வூதியர்களும் விண்ணப்பிக்கலாம் (10818)

தொடர்புகளுக்கு:-
**074 281 3747, 076 781 7238**



Supported by the | Coordinated by | Implemented by | Local Project Partner | cooperation partner

german cooperation · Federal Ministry for Economic Cooperation and Development · sequa · CCIY · AHK · BMP Partnership

CCIY இன் 4$^{வது}$ இணையவழி கருத்தரங்கு

### விவசாயத்திற்கான நீண்டகால சக்தித் தீர்வுகள்

தமிழில்

புதன்கிழமை, 30ம் திகதி, பங்குனி, 2022
நேரம்:- மு. ப 10:30- 12:00

Via zoom Meeting ID : 822 7503 0451
Passcode : 086567 (C-4074)




நெறிப்படுத்துபவர் — Mr. T.யூரிசன் ஜெனராஜ் (CEO, CCIY) B .Com.(Hons), MA.(Pub.Admin)

பேச்சாளர் — Mr. ரஜீதன் மகேஸ்வரன், (Director, Inthira Group (Pvt) Ltd., Lecturer, School of Agriculture, Paranthan, MSc. Agri Engineering

பேச்சாளர் — Mr. கணேசபிள்ளை சுரேன் (Team Lead, Thaayin care (Pvt) Ltd.), OMNE Activisit.

ஏற்பாட்டுக் குழு:
யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம், இல 55, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு: Tel: +9421 222 6609/ +9470 366 3603 Web:- www.cciy.lk Email:- info@cciy.lk



## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்கள், பிள்ளைகளின் யாதகக்குறிப்புகள், அவர்களின் பலன்களும் துல்லியமாக கணித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு ( உரும்பிராய் ) (10819)

**076 835 1932 / 021 223 2222**

வெளிநாட்டுத் திருமணத் தொடர்புகளுக்கு
Wahlen STR - 143 - 4242
Laufen, Swiss
Tel : 0041768185443 | 0041615544242



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

02.04.2022

வங்கியியல் கற்கைநெறிகள்
**BANKING COURSES**
IABF & DABF

கணக்காளர் கற்கை நெறிகள்
CHARTERED ACCOUNTING COURSES
Business Level - i, ii

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
**aat** ( Sri Lanka)
(AA1, AA2, AA3)

G.C.E. A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

**CERTIFICATE COURSE IN ENGLISH**

Further Details
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
(C-4075)

021 222 3382, 021 222 9149, 077 440 5917



## HAPPY BIRTHDAY TO YOU



**Dr. VEERASINGAM SRITHRAN**
**29th March 2022**

So many happy colours in life
So many things you may get deprived
May you have the best time
As it's the day to spread the light
May you stay happy this day
As it's your special birthday
Happiest birthday wish to you
So that you keep smiling all through

WISHES FROM
CHAIRMAN & STAFFS OF VISWAM CAMPUS (PVT) LTD

VISWAM CAMPUS
Empowering Nation through Education
(C-4081)



## பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY

கொனிக்கா கலர் லாப் மற்றும் சிறிராம் ஜுவல்லர்ஸ்
உரிமையாளரும்
தாயக அறக்கொடை நிறுவனத்தின் நிர்வாகியுமான
**"தர்மவிரிதி" கலாநிதி. S.V. சிறிதரன்**




அவர்கள் கடந்த 26.03.2022 கொழும்பிலுள்ள தாஜ்சமுத்ரா ஹோட்டலில் அமெரிக்காவின் உலகத் தமிழ் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட பட்டம் வழங்கும் விழாவில்

**" சமூக சேவைக்கான கலாநிதி "**
( Doctor of Social Service )

பட்டத்தைப் பெற்றமைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு
**இன்று [29.03.2022] தனது 59 ஆவது அகவையில்**
கால்பதிக்கவுள்ளமையினால் அவர் என்றும்
ஆரோக்கியத்துடனும் சகல ஐஸ்வர்யங்களுடனும் நீண்ட
ஆயுளுடனும் நலமாக வாழ

**செட்டியார் குடும்பத்தினர்**
அன்புடன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Happy Birthday
(C-4080)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.